www.Padasalai.Net www.Trbtnpsc.Com

**வகுப்பு : 12**

தேர்வு எண் | | | | | | |

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023 - 24

நேரம் : 3.00 மணி] **வரலாறு** [மொத்த மதிப்பெண்கள் : 90

பகுதி – I

குறிப்பு (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20X1=20

(ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. இந்தியாவின் முதுபெரும் மனிதர் – என அழைக்கப்படுபவர்.
   அ) பாலகங்காதர திலகர் ஆ) எம்.கே.காந்தி இ) தாதாபாய் நௌரோஜி ஈ) சுபாஷ் சந்திர போஸ்

2. சூரத்தில் நடைபெறவிருந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு காங்கிரஸின் அடுத்த தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு யாருடைய பெயர் தீவிர தேசியவாதிகளால் முன்மொழியப்பட்டது?
   அ) அரவிந்த கோஷ் ஆ) தாதாபாய் நௌரோஜி இ) ஃபெரோஸ் ஷா மேத்தா ஈ) லாலா லஜபதிராய்

3. விடிவெள்ளிக் கழகம் என்ற அமைப்பை உருவாக்கியவர்.
   அ) ரவீந்திரநாத் தாகூர் ஆ) அஸ்வினி குமார் தத்தா
   இ) சதீஷ் சந்திர முகர்ஜி ஈ) பக்கிம் சந்திர சாட்டர்ஜி

4. பின்வருவனவற்றைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் உதவியுடன் பொருத்துக.
   அ) கதார் கட்சி – i) 1916
   ஆ) நியு இந்தியா – ii) 1913
   இ) தன்னாட்சி – iii) 1909
   ஈ) மின்டோ–மார்லி சீர்திருத்தம் – iv) 1915
   அ) ii, iv, i, iii ஆ) iv, i, ii, iii இ) i, iv, iii, i ஈ) ii, iii, iv, i

5. பின்வருவற்றை பொருத்தி சரியானவற்றை தேர்வு செய்க.
   அ) நாமசூத்ரா இயக்கம் – வடமேற்கு இந்தியா
   ஆ) ஆதிதர்ம இயக்கம் – தென்னிந்தியா
   இ) சதய சோதக் இயக்கம் – கிழக்கிந்தியா
   ஈ) திராவிட இயக்கம் – தெற்கு இந்தியா

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 3 | 1 | 4 | 2 |
| ஆ) | 2 | 1 | 4 | 3 |
| இ) | 1 | 2 | 3 | 4 |
| ஈ) | 3 | 4 | 1 | 2 |

6. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?
   அ) 1920 ஆ) 1925 இ) 1930 ஈ) 1935

7. எப்போதும் முஸ்லீம் லீக் நேரடி நடவடிக்கை நாளை அனுசரித்தது?
   அ) 25 டிசம்பர், 1942 ஆ) 16 ஆகஸ்ட், 1946 இ) 21, மார்ச் 1937 ஈ) 22 டிசம்பர், 1939

8. பின்வரும் நிகழ்வுகளின் சரியான வரிசையை தேர்வு செய்க.
   i) இந்திய தேசிய இராணுவம் மீதான விசாரணை ii) நேரடி நடவடிக்கை நாள்
   iii) ஆகஸ்ட் கொடை iv) தனிநபர் சத்தியகிரகம்
   அ) i, ii, iii, iv ஆ) iii, i, ii, iv இ) iii, iv, i, ii ஈ) i, iii, iv, ii

9. இந்திய தேசிய இராணுவத்தின் பெண்கள் பிரிவுக்கு தலைமை ஏற்றவர்.
   அ) அம்மு சுவாமிநாதன் ஆ) உஷா மேத்தா இ) கேப்டன் லட்சுமி ஈ) ஜான்சி ராணி

10. கூற்று : ராட்கிளிப்பின் எல்லை வரையறை அனைத்து வகையான முரண்பாடுகளையும் கொண்டிருந்தது.
    காரணம் : முரண்பாடுகள் இருப்பினும் அது அனைவராலும் ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.
    அ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது
    ஆ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்கவில்லை
    இ) கூற்று சரி, காரணம் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

11. பூமிதான இயக்கத்தைத் தொடங்கியவர்.
    அ) ராம் மனோகர் லோகியா ஆ) ஜெயப்பிரகாஷ் நாராயணன்
    இ) வினோபா பாவே ஈ) சுந்தர்லால் பகுகுணா

12. இந்திய – சீனப் போர் நிகழ்ந்த ஆண்டு
    அ) 1952 ஆ) 1960 இ) 1962 ஈ) 1969

13. கூற்று : கலிலியோ கலிலி தேவாலய விரோத கிறித்துவ திருச்சபையால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.
    காரணம் : சூரியனை மையமாக வைத்து கோள்கள் சுற்றுகின்றன என்று கோபர்நிகஸின் சூரிய மையக் கோட்பாட்டை அவர் ஏற்றார்.
    அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது
    ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
    இ) கூற்று சரி, காரணம் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

14. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பொருத்தி சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்.
    அ) மான்டெஸ்கியு – 1. ஜேகோபியர்கள்
    ஆ) வால்டேர் – 2. ஆங்கிலேய நாட்டு தத்துவவாதி
    இ) பயங்கர ஆட்சி – 3. பதினான்காம் லூயிஸ் காலம்
    ஈ) ஜான்லாக் – 4. சட்டங்களின் சாரம்
    அ) 1 3 4 2 ஆ) 4 3 1 2 இ) 4 1 2 3 ஈ) 1 4 3 2

15. இரு உலகங்களின் நாயகன் – என கொண்டாடப்பட்டவர்.
    அ) சார்லஸ் ஆல்பிரட் ஆ) பிஸ்மார்க் இ) மூன்றாம் நெப்போலியன் ஈ) கரிபால்டி

V / 12 / His / 1

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

16. தாஸ் கேபிடல் – எனும் நூலை எழுதியவர்.
அ) இராபர்ட் ஓவன் ஆ) கார்ல் மார்க்ஸ் இ) லூயி பிளாங் ஈ) பிரௌதன்

17. -------- க்கு பின் ஷிமனோசெகி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது?
அ) ரஷ்யா – ஜப்பானி போர் ஆ) இரண்டாம் அபினிப் போர்
இ) இரண்டாம் ஆங்கிலோ – சீனப் போர் ஈ) சீன – ஜப்பானிய போர்

18. கீழ்காண்பவற்றுள் இரண்டாம் உலகப்போரின் விளைவுகளில் சேராத ஒன்று எது?
அ) இரண்டாம் உலகப்போர் ஐரோப்பாவிலிருந்து பலமுடியரசுகளுக்கு மரண அடி கொடுத்தது
ஆ) பிரிட்டனில் தொழிலாளர் கட்சி ஒரு பொதுநல அடிப்படை கொண்ட நாட்டை உருவாக்கியது
இ) பாசிச வாதத்திற்கு எதிரான போராட்டம் ஏகாதிபத்தியத்திற்கு வெற்றியை வழங்கியது
ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் சோவியத் நாடும் இருவல்லரசுகளாக உருவெடுத்தன.

19. சீனாவில் கோமிண்டாங் கட்சியை தோற்றுவித்தார்.
அ) சன்யாட் – சென் ஆ) மாசே – துங் இ) சியாங்கே – ஷேக் ஈ) சூ – யென்லாய்

20. கிளாஸ்நாஸ்ட் குறிப்பது.
அ) ஒளிவு மறைவற்ற வெளிப்படைத் தன்மையை
ஆ) சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியை ஜனநாயகப்படுத்தப்படுவதை
இ) சோவயத் ஐக்கிய பாராளுமன்றம் மறுகட்டமைப்புச் செய்யப்படுவதை
ஈ) பொதுவுடமை தத்துவத்திற்கும் புத்துயிர் அளிப்பதை

## பகுதி - II

7x2=14

**எவையேனும் 7 வினாக்களுக்கும் குறுகிய விடையளிக்கவும். (கட்டாய வினா எண் 30)**

21. தொடக்க கால முக்கிய தேசியவாதிகளை கண்டறிக.
22. பகிஷ்கிரித் ஹிதகர்னிசபா குறித்து எழுதுக.
23. இந்தியாவின் நவீன தொழிற்சாலையின் தந்தை என ஜே.என். டாடா அழைக்கப்பட காரணம் என்ன?
24. தனித் தொகுதி முறையினை பற்றி எழுதுக.
25. ஜே.வி.பி. குழு பரிந்துரைகளின் முக்கியத்துவம் என்ன?
26. சமதர்ம சமூக அமைப்பு என்பதைப் பற்றி நீவீர் அறிந்ததென்ன?
27. இலத்தீன் அமெரிக்க விடுதலைக்கு சைமன் பொலிவரின் பங்களிப்பை சுருக்கமாக வரைக.
28. இத்தாலியை மெட்டர்னிக் "வெறும் பூகோள வெளிப்பாடே" என கூறினார்?
29. பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்கியதன் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்தி எழுதுக.
30. கோமிங்பார்ம் – குறித்து நீங்கள் அறிவதென்ன?

## பகுதி - III

7x3=21

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி. (கட்டாய வினா எண் 40)**

31. கலெக்டர் ஆஷ் ஏன் வாஞ்சிநாதனால் கொல்லப்பட்டார்?
32. தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்களை பற்றி விவரிக்கவும்.
33. தென்னிந்தியாவில் தொழிற்சங்களின் வளர்ச்சிக்காகச் சிங்காரவேலர் ஆற்றிய பங்களிப்புக் குறித்து எழுதுக.
34. இந்திய தேசிய காங்கிரசிலிருநது சுபாஷ் சந்திர போஸ் நீக்கப்பட்டதற்கானக் காரணங்களை விளக்குக.
35. இந்திய அரசமைப்பின் தனிதன்மைகள் யாவை?
36. இந்திய வேளாண்மையின் பின் தங்கிய நிலைக்கான காரணங்கள் யாவை?
37. 1492 – இல் கொலம்பஸ் மேற்கண்ட பயணம் பற்றி குறிப்பு வரைக.
38. பிரான்ஸ் தும்மினால் ஐரோப்பாவிற்கு ஜலதோஷம் – தெளிவுப்படுத்துக.
39. அகழிப் போர் எவ்வாறு நடத்தப்பட்டது?
40. இரண்டாம் உலகப்போரின் முக்கிய விளைவுகளை முன்னிலைப்படுத்துக.

## பகுதி - IV

7x5=35

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்கவும்.**

41. அ) தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து எழுதுக. (அல்லது)
ஆ) திலகர் மற்றும் அன்னிபெசன்ட் ஆகியோரின் கீழ்துவங்கப்பட்ட தன்னாட்சி இயக்கங்களின் செயல்பாடுகளை விளக்குக.

42. அ) இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக. (அல்லது)
ஆ) பகத்சிங்கின் புரட்சிகர தேசியவாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் எவ்வாறு அவரைத் தூக்கு மேடைக்கு இட்டுச்சென்றது?

43. அ) இராஜாஜி திட்டம் பற்றி ஒரு பத்தி எழுதுக. (அல்லது)
ஆ) சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனைகள் என்ன? அவற்றை எவ்வாறு திறமையாக படேல் மற்றும் நேரு கையாண்டனர் என்பததையும் விளக்குக.

44. அ) பிராட்டஸ்டன்ட் சீர்திருத்த இயக்கத்துக்கான காரணங்கள் யாவை? ஜெர்மனியின் மார்டின் லூதர் இந்த இயக்கத்தை எவ்வாறு ஒருங்கிணைத்தார்? (அல்லது)
ஆ) பாஸ்டில் சிறை தகர்ப்பு முதல் ரோபாஸ்பியர் கொல்லப்பட்டது வரையிலுமான பிரெஞ்ச் புரட்சியின் போக்கினை வரைக.

45. அ) இத்தாலிய இணைவு எவ்வாறு சாத்தியமாக்கப்பட்டது? (அல்லது)
ஆ) முதல் உலகப்போரின் காரணங்களையும் விளைவுகளையும் கணக்கிடுக.

46. அ) சீனாவில் பொதுவுடைமை அரசு உருவாக மாசே – துங்கின் பங்களிப்பை விவரித்து எழுதுக. (அல்லது)
ஆ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்கண்ட இடங்களை குறிக்கவும்.
அ) அமிர்தசரஸ் ஆ) வேதாரண்யம் இ) சௌரி சௌரா ஈ) ஜீனாக்த் உகல்கத்தா

47. அ) போரிஸ் யெல்ட்சினின் அரசியல் வளர்ச்சியைக் குறிப்பாக சோவியத் யூனியனின் வீழ்ச்சியில் அவர் வகித்த பங்கின் மீது கவனம் குறித்து விவரிக்கவும். (அல்லது)
ஆ) இரண்டாம் உலகப் போருடன் தொடர்புடைய நிகழ்வுகள் ஏதேனும் ஐந்தை காலக்கோட்டில் அமைக்கவும்.



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com